# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2054 மாசி 22 வியாழக்கிழமை 06.03.2025 கதிர் 145







# தலைமறைவான தேசபந்து தென்னக்கோன் பற்றி தகவல்கள் கிடைத்தால் சி.ஐ.டியிடம் தெரிவிக்கவும்

## பொலிஸ் பேச்சாளர் வேண்டுகோள்



கொழும்பு, மார்ச் 06

கைது செய்வதற்காகப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ள முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தொடர்பில் தகவல் தெரிந்தால், குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு அறியத்தருமாறு பொலிஸார் கேட்டுக்கொண்டுள்ளனர்.

இன்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக மனதுங்க இதனைத் தெரிவித்தார்.

முன்னாள் பொலிஸ்மா அதிபரை கைது செய்வதற்கான நடவடிக்கையில் பல பொலிஸ் குழுக்கள் செயற்பட்டு வருவதாகவும், அவர் தற்போது சட்டத்துக் குக் கீழ்ப்படியாமல் தலைமறைவாக உள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டார்.

நீதிமன்ற உத்தரவை மீறி தப்பிச்சென்ற சந்தேகநபர்களைக் கைது செய்வதற்குப் பயன்படுத்தப்பட்ட அதே நடைமுறையின் கீழ், முன்னாள் பொலிஸ்மா அதிபரையும் கைது செய்ய பொலிஸார் நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும், யாராவது அவர் தலைமறைவாக இருப்பதற்காக

2➤

# உள்ளூராட்சி சபைத் தேர்தலில்

# வடக்கிலும் கிழக்கிலும் களமிறங்கும் மொட்டு!

## சின்னம் தொடர்பில் இன்னும் முடிவில்லையாம்



**கொழும்பு, மார்ச் 06**

**வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வடக்கு, கிழக்கில் எந்தச் சின்னத்தின் கீழ் போட்டியிடுவது என்பது தொடர்பில் இன்னும் முடிவெடுக்கவில்லை எனவும், பங்காளிக் கட்சிகளுடன் கலந்துரையாடல் நடத்தப்பட்டு வருகின்றது எனவும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி தெரிவித்துள்ளது.**

2 ➤

## துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய 68 பேர் இதுவரை கைது



கொழும்பு, மார்ச் 06

நாட்டில் 2025 ஆம் ஆண்டு இதுவரையான காலப்பகுதியில் 19 துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் புத்திக மனதுங்க தெரிவித்தார்.

இந்தச் சம்பவங்கள் தொடர்பில் இதுவரை 68 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும்

2➤

# தையிட்டி விகாரையை என்ன செய்யப்போகின்றீர்?

## அரசிடம் சிறீதரன் எம்.பி. கேள்வி



கொழும்பு, மார்ச் 06

தையிட்டி விகாரை சட்டவிரோதமாக அமைக்கப்பட்டிருக்குமாயின் அதற்காக அரசு மேற்கொள்ளவுள்ள நடவடிக்கை தொடர்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கேள்வி எழுப்பினார்.

2➤

## மின்சாரம் தாக்கி தாயும் மகனும் பலி



அம்பாந்தோட்டை, மார்ச் 06

அம்பாந்தோட்டை, சூரியவெவ ரந்தியகம, வீரியகம பகுதியில் நேற்று புதன்கிழமை மின்சாரம் தாக்கி தாயும் மகனும் உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர்கள், வீரியகம பகுதியைச் சேர்ந்த 38 வயதுடைய தாயும் 5 வயதுடைய மகனும் ஆவர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

உயிரிழந்த மகன் முன்பள்ளிக்குச் சென்றுவிட்டு மீண்டும் வீடு திரும்பியுள்ள நிலையில் வீட்டின் பின்புறத்தில் சைக்கிளில் விளையாடிக் கொண்டிருந்துள்ளார்.

இதன்போது, வீட்டின் பின்புறத்தில் உள்ள பேக்கரி ஒன்றின் பாதுகாப்புக்காகவும் அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லொறியின் பாதுகாப்புக்காகவும் பொருத்தப்பட்டிருந்த மின்சாரக் கம்பியில் சிக்கி மகன் உயிரிழந்துள்ளார்.

பின்னர் இந்த தாயார் தனது

2➤

## துப்பாக்கியுடன் இருவர் கைது



பதுளை, மார்ச் 06

இலங்கையில் தயாரிக்கப்பட்ட ரிவோல்வர் ரக துப்பாக்கியுடன் இரண்டு சந்தேகநபர்கள் விசேட பொலிஸ்

2➤

## தலைமறைவான .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உதவி புரிவார்களானால், அவர்களுக்கு எதிராகவும் சட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பொலிஸ் பேச்சாளர் தெரிவித்தார்.

முன்னாள் பொலிஸ்மா அதிபரைக் கைது செய்வதற்கான முயற்சிகள் வழக்கத்தை விட அதிக முயற்சியுடன் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் நாட்டை விட்டு வெளியேறிவிட்டதாக இதுவரை எந்தத் தகவலும் கிடைக்கவில்லை என்றும் பொலிஸ் பேச்சாளர் மேலும் குறிப்பிட்டார்.

## வடக்கு, கிழக்கில் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்படி தேர்தலை எதிர்கொள்வதற்கான மொட்டுக் கட்சியின் ஏற்பாடுகள் தொடர்பில் அக்கட்சியின் பொதுச் செயலாளர் சட்டத்தரணி சாகர காரியவசத்திடம் எழுப்பப் பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே மேற்படி தகவலை அவர் வெளியிட்டார்.

“இலங்கையிலுள்ள மலையகம் உட்பட அனைத்து மாவட்டங்களிலும் போட்டியிடும் நிலைப்பாட்டிலேயே எமது கட்சி உள்ளது. மொட்டுச் சின்னத்தில் களமிறங்கவே எதிர்பார்க்கின்றோம். எனினும், வடக்கு, கிழக்கில் சிறு மாற்றம் வரலாம்.

பங்காளிக் கட்சிகளுடன் பேச்சு நடத்தி வருகின்றோம். எனினும், இவ்விரு மாகாணங்களிலும் சில இடங்களில் மொட்டுச் சின்னத்தில் வருவோம். ஏனைய மாவட்டங்களில் மொட்டுச் சின்னத்தின் கீழ் களமிறங்குவோம்.” - என்றார்.

## துப்பாக்கிச்சூட்டுச் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் இன்று கூறினார்.

“பாதாள உலகக் குழுக்களால் 12 துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்களும், தனிப்பட்ட மற்றும் இதரகாரணங்களால் 7 துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன. 13 துப்பாக்கிகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.” - என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

## தையிட்டி விகாரையை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றத்தில் இன்று வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில் அவர் இந்தக் கேள்வியை முன்வைத்தார்.

அத்துடன் தங்களின் காணியைக் கோரி போராட்டங்களை முன்னெடுத்து வரும் காணி உரிமையாளர்களுக்கு அரசு முன்வைக்கும் தீர்வு தொடர்பிலும் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் வினவினார்.

இதற்குப் பதிலளித்த புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் விவகார அமைச்சர் ஹினிதும சுனில் செனவி, இந்த விடயம் தொடர்பில் காணி அமைச்சு உள்ளிட்ட பல நிறுவனங்களிடம் இருந்து தகவல் சேகரிக்கப்பட வேண்டியுள்ளதனால் தமக்குக் கால அவகாசம் வழங்குமாறு கோரினார்.

# சந்தேகத்துக்கிடமான முறையில் ஆண் ஒருவர் உயிரிழப்பு

இரத்தினபுரி, மார்ச் 06

இரத்தினபுரி, கொலொன்ன பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் உள்ள வீடொன்றில் சந்தேகத்துக்கிடமான முறையில் ஆண் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று கொலொன்ன பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று புதன்கிழமை இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் நமுத்கடுவ, மத்துகம பிரதேசத்தைச் சேர்ந்த 40 வயதுடையவர் ஆவார்.

இது தொடர்பில் அநடரஅதெரியவருவதாவது,

சம்பவ தினத்தன்று, உயிரிழந்தவர் கொலொன்ன பகுதியில் உள்ள தனது நண்பனின் வீட்டுக்குச் சென்றுள்ளார்.

இந்நிலையில், இவர் நேற்றுமுன்தினம் இரவு உணவை உட்கொண்டு உறங்கச் சென்றுள்ள நிலையில் நேற்று காலையில் அறையினுள் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் எம்பிலிப்பிட்டிய வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கொலொன்ன பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## மின்சாரம் தாக்கி .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மகனைத் தேடி வீட்டின் பின்புறத்திற்கு சென்றுள்ள நிலையில், மகன் கீழே விழுந்துக் கிடப்பதை கண்டு, அவரைக் காப்பாற்றச் சென்ற வேளையில் மின்சாரம் தாக்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சூரியவெவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## துப்பாக்கியுடன் இருவர் ......

குழுவினால் நேற்றுப் பிற்பகல் கைது செய்யப்பட்டனர் என்று மஹியங்கனை பொலிஸார் தெரிவித்தனர்.

துப்பாக்கியை வைத்திருந்ததாகக் கூறப்படும் மஹியங்கனை, இல. 40 இன்டஸ்ட்ரியல் கொலனியில் வசிக்கும் 61 வயதுடைய நபரும், துப்பாக்கியைத் தயாரித்ததாகக் கூறப்படும் பதியத்தலாவ பகுதியைச் சேர்ந்த 39 வயதுடைய ஒருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

பதுளை மாவட்டத்துக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் சுஜித் வெதமுல்ல அவர்களுக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய அவரின் அறிவுறுத்தலின் பிரகாரம் மஹியங்கனை பகுதியில் உள்ள முதலாவது சந்தேகநபரின் வீட்டை சோதனையிட்ட விசேட பொலிஸ் குழுவினர், வீட்டை அண்டிய கராச் ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த குறித்த துப்பாக்கியைக் கண்டுபிடித்துள்ளனர்.

சந்தேகநபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின்போது, பதியத்தலாவ பிரதேசத்தில் துப்பாக்கி தயாரிக்கும் நபரிடம் இருந்து இந்தத் துப்பாக்கி பெறப்பட்டது என்று கூறினார். அதன் பிரகாரம், சில மணித்தியாலங்களின் பின்னர், மேற்படி சந்தேகநபரையும் பொலிஸ் குழு கைது செய்துள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரிடம் நடத்தப்பட்ட விசாரணையின் போது, தான் சில காலமாக வேட்டையாடும் துப்பாக்கிகள் போன்ற துப்பாக்கிகளைத் தயாரித்து வருவதாகவும், யூடியூப் சேனலில் காணொளியைப் பார்த்து தான் இந்தத் துப்பாக்கியைத் தயாரித்ததாகவும் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

பதுளை மாவட்டத்துக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் சுஜித் வெதமுல்லவின் பணிப்புரைக்கமைய பொலிஸ் பரிசோதகர் சுதேஷ் சதுரங்க, பொலிஸ் கிராதுருகோட்டா உள்ளிட்ட குழுவினரால் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் மேலதிக விசாரணைகளுக்காக மஹியங்கனை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இதன்படி, மஹியங்கனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டபிள்யூ.டபிள்யூ.எம் விஜேரத்ன தலைமையில் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

சந்தேகநபர்கள் இருவரும் மஹியங்கனை நீதிவான் நீதிமன்றில் ஆஜர் செய்யப்படவுள்ளனர்.



# வறுமையை சரியாக மதிப்பீடு செய்யவும்

கொழும்பு, மார்ச் 06

அரசாங்கம் முதலில் நாட்டின் வறுமைக் கோட்டை மிகச் சரியாகக் கணக்கிட வேண்டும். இவ்வாறு கணக்கிடாமை பிரச்சினையாக இருந்து வருகின்றது. இதன் மூலம் உண்மையான ஏழ்மையடைந்தோர் எண்ணிக்கையை தீர்மானித்துக் கொள்ள முடியும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் புதன்கிழமை இடம்பெற்ற 2025ஆம் ஆண்டு பட்ஜெட் மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.



மேலும் அவர் கூறியுள்ளதாவது, சமூகப் பாதுகாப்பு, கிராமிய அபிவிருத்தி மற்றும் சமூக வலுவூட்டல், கடற்றொழில், நீரியல் வளங்கள் மற்றும் கடல் வளங்கள் அமைச்சு சார் குழுநிலை விவாதம் இடம்பெறும் இந்த சந்தர்ப்பத்தில், சமூக வலுவூட்டல் தொடர்பான சரியான தரவுகள் மற்றும் குறிகாட்டிகளைப் புரிந்து கொள்ளாமல், தற்போதைய அரசாங்கம் வறுமையை ஒழிப்பதாகப் பேசுவதானது மிகவும் வேடிக்கையான விடயமாகும்.

ஜனாதிபதி கூட உலக வங்கி அறிக்கைகளையே பயன்படுத்துகிறார்.

ஆனால், வீட்டு அலகு ஒன்றின் வருமானம் மற்றும் செலவினம், உணவு மற்றும் உணவு அல்லாத செலவினங்கள் தொடர்பில் முதலில் கணக்கெடுப்பை நடத்த வேண்டும். இதனையே அரசாங்கம் ஆரம்பமாக செய்ய வேண்டும்.

ஜனாதிபதியின் வரவு-செலவுத் திட்ட உரையில் வறுமை 25.9 சதவீதம் என்று கூறப்படுகிறது. 2024 முன்னேற்ற அறிக்கையின்படி, 2025 முதல் 2029 வரையிலான 5 ஆண்டுகளில் பல் பரிமாண வறுமையை எதிர் நோக்கும் 2 மில்லியன் குடும்பங்களை வலுவூட்டுவோம் என்று கூறப்பட்டுள்ளது. 2 மில்லியன் குடும்பங்களை வலுவூட்டுவது சிறந்த விடயம்.

இது நாட்டின் மொத்த வறுமைச் சுட்டியின் பிரகாரம் அமையவில்லை. உலக வங்கி அறிக்கையின்படி 2023 இல் 56 இலட்சம் பேர் வறுமையில் வாடுகின்றனர். புள்ளி விபரங்கள் கூட துல்லியமாக தெரியாமல் வறுமையை ஒழிக்க முடியாது.

அத்துடன், 'அஸ்வெசும' 'உதவித் தொகையை மட்டும் வழங்குவதன் மூலம் இந்த வறுமையை ஒழிக்க முடியாது. இதற்கு சேமிப்பு, முதலீடு, உற்பத்தி, ஏற்றுமதி, நுகர்வு என்பன நடக்க வேண்டும். தற்போது வழங்கப்பட்டு வரும் வறுமை ஒழிப்புக்கான திட்டங்களில் இங்கு பணம் வழங்கப்பட்டு நுகர்வு மட்டுமே நடக்கிறது. இவ்வாறு வறுமையை ஒழிக்க முடியாது. வறுமையை ஒழிப்பதற்கான புதிய வேலைத் திட்டம் இந்த அரசாங்கத்திடம் இல்லை. 'ஜனசவிய' மற்றும் 'சமுர்த்தி' வேலைத் திட்டங்களில் இருந்து பாடம் கற்று, முறையான வறுமை ஒழிப்பு வேலைத்திட்டமொன்றை முன்னெடுக்குமாறும் எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டினார். (ஐ)

# பண்டிகைக்கு தயாராகும் நுவரெலியா



கொழும்பு, மார்ச் 06இந்த ஆண்டு அரச வெசாக் பண்டிகை நுவரெலியா மாவட்டத்தை மையமாகக் கொண்டு நடத்த புத்தசாசன, மத மற்றும் கலாச்சார விவகார அமைச்சு முடிவு செய்துள்ளது. அதன்படி, தேசிய வெசாக் வாரம் மே மாதம் 10 ஆம் திகதி முதல் 16 ஆம் திகதி வரை நடைபெறும் என்று அமைச்சு தெரி வித்துள்ளது. அரச வெசாக் பண்டிகை குறித்து நடைபெற்ற கலந்துரையாடலின் போது, பௌத்த ஞானம் ஏற்படும் வகையில், இந்த ஆண்டு அரச வெசாக் கொண்டாட்டம் அனைத்து இன மக்களின் பங்கேற்புடன் நடத்தப்பட வேண்டும் என்று அமைச்சர் ஹினிதும சுனில் செனவி தெரிவித்துள்ளார். இந்தக் கலந்துரையாடலின் போது, இந்த ஆண்டுக்கான அரச வெசாக் தினக் கொண்டாட்டத்தை மே 12 ஆம் திகதி வெசாக் பௌர்ணமி தினத்தன்று நுவரெலியாவில் நடத்துவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. (ஐ)

# வீதி பாதுகாப்பை மேம்படுத்த அதிவேகத் துப்பாக்கிகள் அறிமுகம்



கொழும்பு, மார்ச் 06

போக்குவரத்து விபத்துகளைக் குறைக்கும் நோக்கில் அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட ஸ்பீட் கன் சாதனங்களை இலங்கை பொலிஸ் பெற்றுள்ளது என்று போக்குவரத்து கட்டுப்பாடு மற்றும் சாலை பாதுகாப்பு இயக்குநர் தெரிவித்துள்ளார்.

இரவில் கூட மிகவும் வெற்றிகரமாகப் பயன்படுத்தக்கூடிய இந்த சாதனம், 1 கிலோமீட்டர் மற்றும் 200 மீட்டர் தூரத்தில் கூட ஒரு மோட்டார் வாகனத்தைப் பிடிக்கும் திறன் கொண்டது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் இதன் மூலம் பதிவு செய்யப்படும் வீடியோவை நீதிமன்றத்தில் ஆதாரமாக சமர்ப்பிக்க முடியும் என்றும், இதன் மூலம் வாகனம் ஓட்டப்பட்ட வேகம், ஓட்டுநர் புகைப்படம், வாகனத்தின் உரிமத் தகடு எண் உள்ளிட்ட பல தகவல்களைப் பெற முடியும் என்றும் தெரிவித்துள்ளார்.

நாட்டில் போக்குவரத்து விபத்துகளுக்கு அதிக வேகம் ஒரு முக்கிய காரணம் என்றும், இதன் விளைவாக தினமும் 8 முதல் 10 பேர் உயிரிழப்பதால் இந்தப் பிரச்சினையைத் தணிப்பதற்கும், அனைவருக்கும் பாதுகாப்பான வீதிகளை உறுதி செய்வதற்கும் இந்த வேகத் துப்பாக்கிகளை அறிமுகப்படுத்துவது ஒரு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகும். (ஐ)

# சட்டவிரோத கடற்றொழிலை இந்தியா தடுக்க வேண்டும்

*கொழும்பு, மார்ச் 06*

*வடக்கில் உள்ள இலங்கை கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை அழிக்கும், தங்கள் நாட்டவர் மீது, இந்திய மத்திய அரசும், தமிழக அரசும் சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று அவைத் தலைவர் பிமல் ரத்நாயக்க இன்று நாடாளுமன்றத்தில் கோரிக்கை விடுத்தார்.*

*இலங்கையில் உள்ள வடக்கு கடற்றொழிலாளர்களுக்கு, இந்தியா வழங்க வேண்டிய சிறந்த உதவி, அதன் சட்டங்களை நடைமுறைப்படுத்துவதும், வடக்கில் உள்ள இலங்கையர்களின் வாழ்வாதாரத்தை அழிக்கும், தமது கடற்றொழிலாளர்களை தடுப்பதுமாகும் என்று, ரத்நாயக்க கூறியுள்ளார்.*

*இந்தியாவின் உண்மையான தன்மையை, தமது நாட்டு கடற்றொழிலாளர்கள், இலங்கை கடல் எல்லைக்குள் ஊடுருவுவதைத் தடுப்பதன் மூலம் மட்டுமே வெளிப்படுத்த முடியும் என்றும் அவர் கூறியுள்ளார். இலங்கையின் தெற்கில் உள்ள கடற்றொழிலாளர்களுடன் ஒப்பிடும்போது வடக்கின் கடற்றொழிலாளர்கள் ஏழைகள் என்று அமைச்சர் தெரிவித்துள்ளார்.*

*இதேவேளை, அவைத் தலைவரின் உரையை அடுத்து, தமது கருத்தை வெளியிட்ட, எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன், இந்த ஆண்டு ஏப்ரல் மாதம் இலங்கைக்கு வருகை தரும் போது, இலங்கை அரசு இந்த விடயத்தை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியிடம் எடுத்துச் செல்ல வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.*



*மேலும், இந்திய கடற்றொழிலாளர்களால், இலங்கையின் வடக்கு கடற்றொழிலாளர்கள் உதவியற்றவர்களாக உள்ளனர். இது ஒரு கட்டத்தில் நிறுத்தப்பட வேண்டும் என்று மனோ கணேசன் கூறியுள்ளார். (ஐ)*

# ஜூலை 3இல் அமர்நாத் யாத்திரை



ஜம்மு: ஜம்மு - -காஷ்மீரின் அனந்த்நாக் மாவட்டம் அமர்நாத்தில், 12,756 அடி உயரத்தில் உள்ள குகை கோவிலில், பனியால் உருவாகும் சிவலிங்கத்தை தரிசிப்பதற்காக, ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் வருவது வழக்கம்.

இந்த ஆண்டுக்கான யாத்திரை தொடர்பாக, அமர்நாத் கோவில் வாரிய கூட்டம், அதன் தலைவரும், ஜம்மு - -காஷ்மீர் கவர்னருமான மனோஜ் சின்ஹா தலைமையில் நேற்று நடந்தது.

இந்த ஆண்டுக்கான அமர்நாத் யாத்திரை ஜூலை 3ல் துவங்குகிறது. அனந்த்நாக் மாவட்டத்தின் பஹல் காம், கந்தர்பால் மாவட்டத்தின் பால்டால் ஆகிய இரண்டு வழித்தடங்களிலும் யாத்திரை துவங்கும். 39 நாட்கள் இந்த யாத்திரை நீடித்து, ஆக., 9 ரக் ஷா பந்தன் நாளில் நிறைவடையும்.வ்வாறு அவர் கூறினார்.



# தேசிய மஞ்சள் வாரியத்தின் செயலராக பவானிஸ்ரீ நியமனம்

ஹைதராபாத்: மஞ்சள் உற்பத்தி மற்றும் ஏற்றுமதியை மேம்படுத்தும் நோக்கில், தெலுங்கானா மாநிலம், நிஜாமாபாத்தை தலைமையிடமாக வைத்து தேசிய மஞ்சள் வாரியம் தொடங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், வாரியத்தின் செயலராக, தமிழக பிரிவைச் சேர்ந்த ஐ.ஏ.எஸ்., அதிகாரி பவானி ஸ்ரீயை நியமித்து மத்திய வர்த்தகத் துறை அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

இந்த நியமனம் உடனடியாக அமலுக்கு வருவதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது. இதையடுத்து, செயலராக பொறுப்பேற்றுக் கொண்ட பவானிஸ்ரீ, மஞ்சள் வாரிய அலுவலகத்தில், வாரியத் தலைவர் பல்ல கங்கா ரெட்டியிடம் வாழ்த்து பெற்றார். (ஐ)

# பதவிக்கு 'நோ' சொன்ன மாயாவதி சகோதரர்

லக்னோ: பகுஜன் சமாஜ் தேசிய ஒருங்கிணைப்பாளர் பதவியை, கட்சி தலைவர் மாயாவதியின் சகோதரரான ஆனந்த் குமார் ஏற்க மறுத்துள்ளார்.

பகுஜன் சமாஜ் தலைவர் மாயாவதி. இவரது சகோதரரான, ஆனந்த் குமார் கட்சியின் துணைத் தலைவராக உள்ளார். கட்சியின் தேசிய ஒருங்கிணைப்பாளராக இருந்த ஆனந்த் குமாரின் மகன் ஆகாஷ் ஆனந்தை கட்சியில் இருந்து மாயாவதி சமீபத்தில் நீக்கினார்.

இதைத் தொடர்ந்து, தேசிய ஒருங்கிணைப்பாளர் பதவி ஆனந்த் குமாருக்கு கூடுதலாக வழங்கப்பட்டது. ஆனால், ஒருவருக்கு ஒரு பதவி கொள்கையை பின்பற்ற விரும்புவதாக தெரிவித்து, ஒருங்கிணைப்பாளர் பதவியை ஆனந்த் குமார் ஏற்க மறுத்தார்.

இதையடுத்து, தேசிய ஒருங்கிணைப்பாளர் பதவி ரன்தீர் பெனிவலுக்கு வழங்கப்பட்டுள்ளது. (ஐ)



# 4,000 கோடியில் கேதார்நாத்தில் 'ரோப் கார்' மத்திய அமைச்சரவை கூட்டத்தில் ஒப்புதல்

கேதார்நாத், ஹேம்குண்ட் ஷாகிப் குருத்வாரா புனித தலங்களில், 6,800 கோடி ரூபாய் மதிப்பில் 'ரோப் கார்' வசதி அமைக்க, பிரதமர் மோடி தலைமையிலான மத்திய அமைச்சரவை கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

உத்தரகண்டின் ருத்ரபிரயாக் மாவட்டத்தில் உள்ள ஹிந்துக்களின் புனித தலமான கேதார்நாத்தில், ஆண்டுதோறும் 20 லட்சம் பக்தர்கள் தரிசனம் செய்கின்றனர்.


ஏப்., - மே -மாதத்தில் அட்சய திரிதியை தினம் துவங்கி, அக்., - நவம்பரில் தீபாவளி வரை கோவில் திறந்திருக்கும். 11,968 அடி உயரத்தில் பனி சூழ்ந்த மலை மீது இருக்கும் கேதார்நாத் கோவிலுக்கு, கவுரிகுண்டில் இருந்து 16 கி.மீ., துாரம் மலை மீது நடந்தும், ஹெலிகாப்டரிலும் பயணம் செய்ய வேண்டும்.

இந்நிலையில், கேதார்நாத் செல்லும் பக்தர்களின் வசதிக்காக, ரோப் கார் அமைக்கும் திட்டத்துக்கு, பிரதமர் மோடி தலைமையில் நேற்று நடந்த பொருளாதார விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவை கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

இந்த தகவலை, மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்பு துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

இதையடுத்து, 4,081.28 கோடி ரூபாய் செலவில், சோன் பிரயாக் - -கேதார்நாத் இடையே 12.9 கி.மீ., துாரத்துக்கு தனியார் பங்களிப்புடன் ரோப் கார் அமைக்கப்படுகிறது. (ஐ)

# 433 லட்சம் கோடி பொருளாதார நாடாக இந்தியா மாறும்: மோடி




''நம் நாடு, 433 லட்சம் கோடி ரூபாய் பொருளாதார நாடாக மாறும் நாள் வெகு தொலைவில் இல்லை,'' என, பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.

டில்லியில் நேற்று நடந்த பட்ஜெட்டுக்கு பிந்தைய வேலைவாய்ப்பு குறித்த இணைய வழி கருத்தரங்கில், 'வீடியோ கான்பரன்ஸ்' வாயிலாக, பிரதமர் மோடி பேசியதாவது:

கடந்த 2014 முதல், 3 கோடி இளைஞர்களுக்கு திறன் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. 1,000 ஐ.டி.ஐ.,க்களை மேம்படுத்தவும், ஐந்து சிறப்பு மையங்களை அமைக்கவும் அரசு முடிவு செய்துள்ளது.

நம் நாடு, 329 லட்சம் கோடி ரூபாய் பொருளாதாரமாக மாறி உள்ளது. இது, 433 லட்சம் கோடி ரூபாயாக மாறும் நாள் வெகுதொலைவில் இல்லை.

திறன் மேம்பாடு, திறமை வளர்ப்பு ஆகியவை தேசிய வளர்ச்சிக்கு மிகவும் முக்கியம். இந்த துறைகளில் அதிக முதலீடு அவசியம்.

'மக்களின் முதலீடு' என்ற தொலைநோக்குப் பார்வை, கல்வி, சுகாதாரம், திறன் மேம்பாடு ஆகிய மூன்று துாண்களில் நிற்கிறது.

இந்த துறைகளில் முதலீடு செய்து, நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு அனைத்து பங்குதாரர்களும் உதவ வேண்டும். சுற்றுலாவை மையமாக வைத்து, நாடு முழுதும் 50 சுற்றுலா தலங்கள் மேம்படுத்தப்படும். இந்த இடங்களில் உள்ள ஹோட்டல்களுக்கு உட்கட்டமைப்பு அந்தஸ்து வழங்குவது, சுற்றுலாவை எளிதாக்கி உள்ளூர் வேலைவாய்ப்பையும் அதிகரிக்கும். இவ்வாறு அவர் பேசினார். (ஐ)

மாலைக்கதிர்
Maalaikkathir





# விவாகரத்து விடுதலையா?

சமீபத்திய பேசுபொருளாக மாறியிருப்பது சினிமா நட்சத்திரங்களின் விவாகரத்து அறிவிப்புகள்தான். அவர்கள் விவாகரத்து முடிவை எடுத்தது சரியா? தவறா? என்பதல்ல நமது வாதம். அது அவரவர்களின் தனிப்பட்ட குடும்ப சூழ்நிலை மற்றும் மன விருப்பம் உள்ளிட்ட காரணங்களால் எடுக்கப்படுவது. அதை வெளியிலிருந்து விமர்சிப்பது, அநாகரிகமான செயல்.

முந்தைய காலங்களை விட இப்போது விவாகரத்துகள் அதிகரித்து வருகின்றன. இதற்கான முக்கிய காரணங்களாக சகிப்புத்தன்மை இன்மையும், விட்டுக் கொடுத்துப் போகும் மனப்பான்மையின்மையும் தான் முன்வைக்கப்படுகின்றன. எல்லாத் திருமண வாழ்க்கையும் வெற்றிகரமாக இருப்பதில்லை. எல்லாத் தம்பதியரும் மனமொத்து இருப்பதில்லை. வேப்பம்பழத்தில் இருப்பது போல மெல்லிய கசப்புத் தன்மையுடன் தான் இருக்கிறார்கள். என்றாலும் எல்லோரும் விவாகரத்து செய்து கொள்வதில்லை.

மனிதர்கள் தோன்றிய காலந்தொட்டே ஆண்-பெண் உறவு சிக்கல்கள் நிறைந்ததாகத்தான் பிணைக்கப்பட்டிருக்கிறது. ஒருவர் இன்னொருவர் மீது ஆளுமையை ஏற்படுத்த முயற்சிப்பதுதான் பெரும்பாலான பிரச்சனைகளுக்குக் காரணமாக அமைகின்றது. நமது தமிழ்த் திருமணங்கள் மிகவும் விநோதமானவை. யாரென்றே தெரியாத இருவரை ஊரும், உறவுகளும் சேர்ந்து ஒரு கயிற்றின் முனையில் புனிதமான(?) பந்தத்தை ஏற்படுத்தி, அன்றைய இரவே இருவரையும் தனியறைக்குள் அனுப்பும் அளவுக்கு மிகவும் குரூரமானவை.



ஒருவருடைய ரசனை இன்னொருவருக்கு இருக்காது. என்றாலும் பெரும்பாலும் பெண்ணே தன் கணவனின் ரசனைக்கு ஒத்துப் போவதற்கு பழக்கியிருக்கிறாள். அப்போதுதான் குடும்பம் சீராகச் செல்லும் என்ற சப்பைக் காரணத்தால், அந்தப் பெண் தனது விருப்பங்களை வெளியிடுவதற்குக் கூட யோசித்து யோசித்து காலப்போக்கில் ரசனை, விருப்பம் ஏதுமின்றி ஒரு வாழ்க்கைக்குப் பழகி விடுவாள். அதுதான் தியாகம் என்று அவளே நம்பும் அளவுக்கு அவளது மூளை கலாசார சலவைக்கு உட்படுத்தப்பட்டு இருக்கிறது.

பெரும்பாலான விவாகரத்து முடிவுகள் தனக்கோ அல்லது இணைக்கோ இன்னொருவர் மீது ஈர்ப்பு இன்மையால் தான் எழுகின்றன. தன்னுடைய அல்லது இணையுடைய பாலியல் தேவைகள் நிறைவேறாத போது, அல்லது அதீத பாலியல் ஆர்வம் (இன்றைய காலகட்டத்தில் இது கொஞ்சம் கடினம்தான்), பொருளாதாரப் பற்றாக்குறை, அன்பான அனுசரணையான பேச்சு இல்லாமை என்று பல காரணங்களாலும் ஏற்படுகின்றன. சில வேறுசுவை தேடிச் செல்லும் விதிவிலக்குகளாகவும் அமைந்து விவாகத்தை விவாதமாக மாற்றுகின்றனர்.

இப்போதெல்லாம் பிரிந்து செல்பவர்கள், உறவை நண்பர்களாகத் தொடர்கிறார்கள். நட்பு என்ற உறவுக்கு கட்டுப்பாடுகள் ஏதும் இல்லாத காரணம் தான் நண்பர்களை நாம் அதிகமாக விரும்புவதன் உளவியல் காரணி என்று நினைக்கிறேன். கணவன் மனைவி என்ற உறவின் நிர்ப்பந்தம் தான் பிரிவுக்கான முக்கியமான காரணி. எதையும் வெளிப்படையாக, அடுத்தவர் என்ன நினைப்பாரோ என்ற தயக்கத்துடன் வார்த்தைகளைத் தேர்ந்தெடுத்துப் பின்னாமல், மனதில் பட்டதையும், விருப்பங்களையும் சகஜமாக வெளிப்படுத்தும் உறவில் தான் சிக்கல்கள் பெரும்பாலும் எழுவதில்லை.

அந்தக் காலத்தில் கூட்டுக் குடும்பமாக இருந்த காரணத்தால் ஒருவரின் முக வாட்டத்திலேயே பெரியவர்களோ அல்லது மற்றவர்களோ பிரச்சினை என்னவென்று கண்டறிந்து அதற்கேற்ப அறிவுரை வழங்கி முளையிலேயே பிரச்சினையைக் கிள்ளி எறிந்தனர். ஆனால் இன்றைய தனிக்குடித்தனத்தில் பிரச்சினைகளைப் பகிர்ந்து கொள்ள ஆட்களின்றி எது சீரியஸான பிரச்சினை?.. எது சாதாரணமான பிரச்சினை?..என்று பிரித்துக் கண்டறிய முடியாமல், சிறிய விஷயங்களைக் கூட பூதக்கண்ணாடி வைத்துப் பெரிதாக்கிப் பார்க்கிறார்கள்.

அதுவுமின்றி இன்றைக்கு நிறையக் குடும்பங்களில் ஒற்றைக் குழந்தை மட்டுமே இருப்பதால் தேவைப்படுவற்றையும், தேவையில்லாதவற்றையும் பெற்றவர்கள் வாங்கிக் கொடுத்துப் பழக்கி விடுகிறார்கள். இல்லையென்ற சொல்லை இன்றைய தலைமுறை கேட்பதில்லை. சிறிய தோல்விகளைக் கூட ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவம் இல்லை. அதே மனப்பான்மையுடன் இணையை அணுகும் போதுதான், பிரச்சினை வெடிக்கத் தொடங்குகிறது.

ஒவ்வொருவரும் தமது இணை மாறவேண்டும் என்று தான் எதிர்பார்க்கிறார்கள். தாமும் மாற வேண்டும் என்று நினைப்பதில்லை. எல்லோருமே நூறு சதவிகிதம் திருப்திகரமாக இணையிடம் நடந்து கொள்ள முடியாது. ஒவ்வொருவரும் அடுத்தவரை அவரது குறையுடன் ஏற்றுக் கொள்ளப் பழகிக் கொள்ள வேண்டும். அப்போதுதான் உறவு ஓரளவு சீராகச் செல்லும்.

திருமணம் என்பது தனிமனிதப் பிரச்சினை என்பதுபோல விவாகரத்தும் தனிமனித சுதந்திரம் தான். அதில் அநாவசியமாக மூக்கை நுழைத்து கருத்து சொல்லும் உரிமை பெற்றவர்களுக்கே கிடையாது. ஒருவரது திருமண வாழ்க்கை கசப்பாக இருக்கும் பட்சத்தில் அந்த உறவிலிருந்து வெளியேறி விடுவதே நல்லது. அடுத்தவர் என்ன நினைப்பார்கள்?.. சமுதாயம் எப்படி நோக்கும்?.. என்றெல்லாம் தேவையின்றி சிந்தித்து வாழ்வை நரகமாக்கிக் கொள்ளக் கூடாது.

சமீபத்தில் இறந்த கேரளப் பெண் விஸ்மயாவின் துர்மரணத்தை இது போன்ற வறட்டுக் கௌரவம் பார்க்கும் பெற்றோர் ஒரு பாடமாக எடுத்துக் கொள்ள வேண்டும். மூச்சுத் திணறும் திருமண வாழ்க்கையிலிருந்து ஒருவரை ஆசுவாசப்படுத்தும் சாளரமாக விவாகரத்து அமையவேண்டும். யாரையும் எதிர்பார்க்காமல் தனது உழைப்பால் தனது வாழ்வைத் தானே கட்டமைக்கும் தைரியத்தைப் பெண்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

தமிழ்த் திருமணங்களில் பெரும்பாலும் (இல்லை..முழுக்க முழுக்க) ஆண் தனது பெற்றோரைக் கவனித்துக் கொள்ளவும், வீட்டு வேலைகளைச் செய்யவும், இரவில் தனது படுக்கையறைத் தேவைகளுக்கு ஒரு வடிகாலாகவுமே ஒரு பெண்ணைத் திருமணம் செய்து கொள்கிறான். நீங்கள் இல்லையென்று சொன்னாலும் அதுதான் உண்மை. இன்றைய இளைஞர்களிடத்தில் கேட்டுப் பாருங்கள். “அம்மாவைப் பாத்துக்கணும்..”, “அம்மாவால வீட்டுவேலை செய்ய முடியலை..அதான் சீக்கிரம் கல்யாணம்..” இப்படியான பதில்கள் தான் வருகிறது.

வாழ்வின் இறுதிவரை வரப்போகும் உறவு, கூடவே பயணிக்கும் ஓர் இணையைத் தேர்ந்தெடுப்பதில்கூட இன்றைய இளைய தலைமுறையினருக்குத் தெளிவில்லை. ஒரு பழரசம் அருந்தும் நேரத்தில் திருமணத்தை முடிவு செய்கிறார்கள்.

இன்னும் ஒரு க்ரூப் இருக்கிறது. தேவையில்லாத ‘ஓவர் பேச்சால் நல்ல இணையை இழந்து விடுகிறது. அவர்களைப் புரிந்து கொள்கிறேன் பேர்வழி என்று சில சந்திப்புகளிலேயே அதிகமான, தேவையற்ற பேச்சால் எதிர்பாலரை எரிச்சலடைய வைத்து விடுகிறார்கள்.

இந்தத் திருமண உறவென்பது நத்தையிடம் வித்தை கற்றுக் கொள்வதைப் போன்றது. எப்படியென்றால் நன்கு கூர்மையான ஒரு ப்ளேடில் ஒரு நத்தையால் தனது உடலைக் கிழித்துக் கொள்ளாமல் நடந்து செல்ல முடியும். திருமண பந்தமும் அப்படித்தான். எந்தச் சேதாரமும் இல்லாமல் நடக்கக் கற்றுக் கொள்ள வேண்டும்.

திருமணம் என்பது ஒருவரின் தனிப்பட்ட அடையாளத்தை அழிக்கும் விதமாக இருக்கக் கூடாது. தனது இணையின் வளர்ச்சிக்குக் கை கொடுத்து உதவி செய்யாவிடினும், தடை போடாமலிருக்கும் திருமணங்களே வெற்றி பெறுகின்றன. ஒருவர் வளர்ச்சியில் இன்னொருவர் மகிழும் மனப்பக்குவத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

எல்லாவற்றையும் மீறிப் பிரிவது என்று முடிவு செய்து விட்டால், அது புரிதலுடன் கூடிய பிரிவாக இருப்பது மிகவும் நல்லது. பரஸ்பரம் மனக்காயங்கள் ஏதுமின்றிப் பிரிவது சிறந்தது. விவாகரத்து செய்தவர்களிடம் காரணங்கள் கேட்டு அடுத்தவர்கள் குடைச்சல் கொடுக்காதிருக்கும் அடிப்படை நாகரிகத்தைக் கற்றுக் கொள்ள வேண்டும். விவாகரத்து செய்த பெண்களைப் புருவம் உயர்த்தி கேள்விக் குறியோடு பார்ப்பதைத் தவிர்க்க வேண்டும். மறுமணம் எப்போது என்ற அதிமுக்கியமான(?) கேள்வியைக் கேட்கக் கூடாது. ஆக மொத்தம் அவர்களின் அந்தரங்கத்தை எட்டிப் பார்க்கக் கூடாது.

ஒரு பிரச்சினையிலிருந்து தப்பித்து வந்தவர்களை அடுத்த பிரச்சினைக்குள் நாம் தள்ளிவிடக் கூடாது. திருமணம், விவாகரத்து போன்ற தனிப்பட்ட விஷயங்களை பொது விஷயங்களாக்கக் கூடாது.

அந்தக் காலத்தில் பெண்கள் படிக்காத காரணத்தால், பொருளாதார சுதந்திரமின்மையால் இதுபோன்ற முடிவுகளை எடுக்கத் துணியாமல் இருந்தார்கள். இப்போதைய பெண்கள் படித்து, பணிக்குச் செல்வதால் எந்தவிதக் கொடுமையையும் சகித்துக் கொண்டு இருக்க வேண்டும் என்றில்லாமல் துணிந்து முடிவெடுக்கிறார்கள். அவர்களது வலியை அவர்களால் தான் உணரமுடியும். விவாகரத்து செய்த ஆணோ அல்லது பெண்ணோ யாராக இருந்தாலும் பொதுவில் நாம் விமர்சனம் செய்வதைத் தவிர்ப்போம். அவரவர் வாழ்க்கை அவரவர் கையில் என்பதை நாம் உணர வேண்டும். அவரவர் பாதையில் அவரவர் பயணம்.

> திருமணம் என்பது ஒருவரின் தனிப்பட்ட அடையாளத்தை அழிக்கும் விதமாக இருக்கக் கூடாது. தனது இணையின் வளர்ச்சிக்குக் கை கொடுத்து உதவி செய்யாவிடினும், தடை போடாமலிருக்கும் திருமணங்களே வெற்றி பெறுகின்றன. ஒருவர் வளர்ச்சியில் இன்னொருவர் மகிழும் மனப்பக்குவத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

# போரை நீங்கள் விரும்பினால் அதற்கும் தயார்: அமெரிக்காவின் பரஸ்பர வரிக்கு சீனா பதிலடி



பீஜிங்: சீன பொருட்களுக்கான இறக்குமதி வரியை உயர்த்தி அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் உத்தர விட்டுள்ளார். மேலும், தங்கள் பொருட்களுக்கு சீனா விதிக்கும் வரிக்கு இணையாக பரஸ்பர வரியை விதிப்போம் என்றும் அவர் கூறியுள்ளார். இதற்கு, 'நீங்கள் போரை விரும்பினால், அதற்கு தயார். அது வர்த்தகம், வரி அல்லது எந்த வடிவில் இருந்தாலும் சரி, இறுதி வரை பார்த்துவிடுவோம்' என, சீனா பதிலடி கொடுத்துள்ளது.

அமெரிக்க அதிபராக கடந்த ஜன., 20ல் பதவியேற்ற டொனால்டு டிரம்ப் பல அதிரடி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறார். அதன்படி, தன் நாட்டின் பொருட்களுக்கு அதிக வரி விதிக்கும் நாடுகள் மீது, பரஸ்பரம் அதே அளவு வரியை விதிக்கப் போவதாக கூறியிருந்தார்.

சீனாவில் இருந்து இறக்குமதி செய்யும் பொருட்களுக்கு ஏற்கனவே 10 சதவீதம் கூடுதல் வரியை அறிவித்திருந்தார். இந்நிலையில், நேற்று முன்தினம் மேலும் 10 சதவீதம் கூடுதல் வரி விதிப்பதாக அறிவித்தார்.

இதற்கு உடனடி பதிலடி கொடுக்கும் வகையில், அமெரிக்கா மீது 15 சதவீத கூடுதல் வரி விதிப்பதாக சீனா அறிவித்தது. இந்நிலையில், அந்த நாட்டின் பார்லிமென்ட் கூட்டுக் கூட்டத்தில் நேற்று பேசிய அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப், "நம் பொருட்களுக்கு அதிக வரி விதிக்கும் இந்தியா, சீனா உள்ளிட்ட நாடுகளுக்கு, பரஸ்பரம் அதே அளவு வரியை விதிப்போம். இது, ஏப்., 2 முதல் அமலுக்கு வருகிறது," என்றார்.

ஏற்கனவே, சீன அதிபர் ஷீ ஜின்பிங் மற்றும் டொனால்டு டிரம்புக்கு இடையே கருத்து வேறுபாடு உள்ளது. 'கொரோனா தொற்று உலகம் முழுதும் பரவியதற்கு சீனாவே காரணம்' என, அப்போது அதிபராக இருந்த டிரம்ப் கூறியிருந்தார்.

மருத்துவ அறுவை சிகிச்சைகளின்போது, மயக்க மருந்து மற்றும் வலி நிவாரணியாக பயன்படுத்தும், 'ஓபியாட்' வகை மருந்துகள் அதிகமாக செலுத்தப்படுவதால் அமெரிக்காவில் அதிக அளவு உயிரிழப்பு ஏற் . இதில் முக்கியமானது, 'பென்டானில்' எனப்படும் மருந்துக்கு தேவையான ரசாயனங்களை, சீனாவே அதிகளவு ஏற்றுமதி செய்கிறது. இதை நிறுத்தும்படி சீனாவுக்கு அமெரிக்கா எச்சரிக்கை விடுத்திருந்தது.

இந்நிலையில், அமெரிக்காவின் இந்த முடிவுகளுக்கு கடுமையான வார்த்தைகளுடன் பதிலளித்து, சீன வெளியுறவுத் துறை நேற்று செய்தி வெளியிட்டுள்ளது. (ஐ)

# ட்ரூடோவிடம் விளக்குங்கள்: வம்புக்கு இழுத்தார் டிரம்ப்



அமெரிக்கப் பொருட்களுக்கு பதிலடி வரி விதிக கப்படும் என கனடா அறிவித்ததைத் தொடர்ந்து, அந்நாட்டு பொருட்களுக்கு மேலும் இறக்குமதி வரி விதிக்கப் போவதாக அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் எச்சரித்துள்ளார்.

அமெரிக்க அதிபராக ஜன., 20ல் பதவியேற்ற டொனால்டு டிரம்ப், பல அதிரடி நடவடிக்கைகளை எடுத்து வருகிறார். தன் அண்டை நாடுகளான கனடா மற்றும் மெக்சிகோவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு, 25 சதவீத வரியை விதிக்கும் உத்தரவை அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் பிறப்பித்துள்ளார்.

இதற்கு பதிலடி கொடுக்கும் வகையில், அமெரிக்காவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு, 25 சதவீத வரி விதிப்பதாக, கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ அறிவித்தார்.

அமெரிக்கப் பொருட்களுக்கு பதிலடி வரி விதிக்கப்படும் என கனடா அறிவித்ததைத் தொடர்ந்து, அந்நாட்டு பொருட்களுக்கு மேலும் இறக்குமதி வரி விதிக்கப் போவதாக அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் எச்சரித்துள்ளார். (ஐ)

# அமெரிக்கா உடன் இணைந்து பணியாற்றுவோம்: உதவியை நிறுத்திய பிறகும் சொல்கிறது உக்ரைன்

உதவியை நிறுத்துவதாக அமெரிக்கா அறிவித்த பிறகும், அந்நாட்டுடன் இணைந்து அமைதியான முறையில் பணியாற்றுவோம் என உக்ரைன் கூறியுள்ளது.

ரஷ்யா தாக்குதலை நிறுத்துவது தொடர்பாக வெள்ளை மாளிகையில் அமெரிக்க அதிபர் டிரம்ப் மற்றும் உக்ரைன் அதிர் ஜெலன்ஸ்கி இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. தொடர்ந்து, உக்ரைனுக்கு அளிக்கப்பட்டு வந்த ராணுவ உதவிகளை நிறுத்துவதாக அதிபர் டிரம்ப் அறிவித்தார். இந்நிலையில் உக்ரைன் பிரதமர் டெனிஸ் ஷ்மைஹல் கூறியதாவது: அமைதியான முறையில் அமெரிக்கா உடன் இணைந்து பணியாற்றுவோம். அமெரிக்காவின் ராணுவ உதவி , உக்ரைனுக்கு முக்கியமானதாக இருந்தது. ஆயிரக்கணக்கான மக்கள் உதவியாக இருந்தது.

உக்ரைன் அரசுக்கும், ராணுவத்திற்கும் அனைத்து திறமையும் உள்ளது. போர்க்களத்தில் முன்னணியில் உள்ளது. இவ்வாறு அவர் கூறினார். (ஐ)



# ஹசீனாவை நாடு கடத்தும் கோரிககை

ஹசீனாவை நாடு கடத்தும் கோரிக்கை குறித்து இந்தியாவிடம் இருந்து இதுவரை அதிகாரப்பூர்வ பதில் வரவில்லை என்று வங்கதேச இடைக்கால அரசின் தலைவர் முகம்மது யூனுஸ் கூறினார்.

வங்கதேச முன்னாள் பிரதமர் ஹசீனா, 77, மாணவர் போராட்டம் காரணமாக, கடந்த ஆண்டு அந்நாட்டை விட்டு வெளியேறி இந்தியாவில் அரசியல் தஞ்சம் புகுந்தார். இதையடுத்து அந்நாட்டில் முகமது யூனுஸ் தலைமையில் இடைக்கால அரசு செயல்பட்டு வருகிறது.

வங்கதேசத்தின் சர்வதேச குற்றவியல் தீர்ப்பாயம் (ஐ.சி.டி.,) ஹசீனா மற்றும் பல முன்னாள் அமைச்சர்கள், ஆலோசகர்கள் மற்றும் ராணுவ மற்றும் சிவில் அதிகாரிகளுக்கு எதிராக கைது வாரண்டுகளை பிறப்பித்துள்ளது.

இதையடுத்து ஹசீனாவை தங்கள் நாட்டுக்கு திருப்பி அனுப்ப வேண்டும் என்று வங்கதேச அரசு வேண்டுகோள் விடுத்துள்ளது. இதற்கு இந்தியா தரப்பில் பதில் எதுவும் தரப்படவில்லை.

ஹசீனா மீது பல்வேறு கொலை, கடத்தல் உள்ளிட்ட குற்றங்கள் சாட்டப்பட்டுள்ளது. ஹசீனா வங்கதேசத்தில் உடல் ரீதியாக இருந்தாலும் சரி அல்லது இல்லாதிருந்தாலும் சரி, இந்தியாவில் நீதிமன்றத்தை எதிர்கொள்வார். அவர் குற்றச்சாட்டுகளை மறுத்து, தான் அரசியல் ரீதியாக துன்புறுத்தப்படுவதாகக் கூறுகிறார்.

ஹசீனாவை நாடு கடத்த வேண்டும் என்று இந்திய அரசிடம் கோரிக்கை விடுத்திருந்தோம். ஆனால் அதற்கான அதிகாரப்பூர்வமான பதில் இந்தியாவிடம் இருந்து வரவில்லை.இவ்வாறு முகம்மது யூனுஸ் கூறினார். (ஐ)

# மலையக தமிழர்களுக்கு ஏன் இந்த நிலை?



கொழும்பு, மார்ச் 06

முதல் 1977 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட எல்லை நிர்ணயத்தில் மலையக தமிழர்கள் கணக்கில் எடுக்கப்படவில்லை. இதுவே இன்றைய பிரச்சினைக்கு பிரதான காரணியாக உள்ளது. ஆகவே, எல்லை நிர்ணயம் திருத்தம் செய்யப்பட வேண்டும் என இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பொது செயலரும் ஐக்கிய தேசியக் கட்சியின் எம்.பியுமான ஜீவன் தொண்டமான் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் புதன்கிழமை இடம்பெற்ற 2025ஆம் ஆண்டு பட்ஜெட் மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு வலியுறுத்தினார்.

பெருந்தோட்ட மக்களின் சம்பள விவகாரம் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர்களான இரா.சாணக்கியன், நாமல் ராஜபக்ஷ மற்றும் பைஸர் முஸ்தபா ஆகியோர் செவ்வாய்க்கிழமை பாராளுமன்றத்தில் உரையாற்றி விசேட கரிசனையை வெளிப்படுத்தியிருந்தார்கள். மலையக மக்களின் சார்பில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

ஹட்டன் - செனன் தோட்டத்தில் கே.எம். பிரிவில் 100 பேர் வாழ்கிறார்கள். 26 வீடுகள் தீக்கிரையாகியுள்ளன. இதனால் அப்பகுதியில் உள்ள அனைவரும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இதுவரையில் இவர்களுக்கு நிவாரணம் வழங்கப்படவில்லை.

நான் நேரடியாகச் சென்று தோட்ட நிர்வாகத்துடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டேன். எம்மால் இயலுமான வகையில் நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுத்துள்ளோம்.

பெருந்தோட்ட பகுதிகளில் சுமார் 3,500 வீடுகள் தீ மற்றும் இதர அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டுள்ளன. தீ விபத்தினை அனர்த்தத்துக்குள் உள்ளடக்க முடியாது என்ற தவறான கொள்கை நீண்டகாலமாகக் கடைப்பிடிக்கப்படுகிறது. இதனால் பாதிக்கப்பட்டவர்கள் தற்காலிக வீடுகளில் வசிக்கிறார்கள்.இவர்களுக்கு நிலையான தீர்வு கிடைக்கவில்லை என்றார். (ஐ)

# முக்கொலையுடன் தொடர்புடைய துப்பாக்கிதாரி கைது

கொழும்பு, மார்ச் 06

தெனிய பகுதியில் கடந்த பெப்ரவரி மாதம் 18 ஆம் திகதி இரவு மூன்று பேர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய துப்பாக்கிதாரி கைது செய்யப்பட்டுள்ளார். இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தந்தை, மகன் மற்றும் மகள் கொல்லப்பட்டனர்.

மோட்டார்சைக்கிளில்பிரவேசித்த இனந்தெரியாதோரால், இந்த துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டிருந்தது. இன்று கைது செய்யப்பட்ட சந்தேக நபருடன், இந்தக் குற்றச் செயல் தொடர்பாக இதுவரை 08 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் மித்தெனிய பொலிஸார் மற்றும் தங்காலை குற்றவியல் பணியகத்தால் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரும், இராணுவத்திலிருந்து தப்பியோடி பின்னர் சட்டப்பூர்வமாக வெளியேறிய இரண்டு முன்னாள் இராணுவ உறுப்பினர்களும் அடங்குவதாக தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

# சீனாவின் மூக்கு வேண்டாம்



கொழும்பு, மார்ச் 06

மீனவர் பிரச்சினையை வைத்துக்கொண்டு எமக்கும் இந்தியாவுக்கும் இடையே முரண்பாடுகளை ஏற்படுத்த முயற்சிக்கப்படுவதாகவும் இதற்கு ஒருபோதும் இடமளிக்க மாட்டோம் என தெரிவித்த ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், இந்த விடயத்தில் சீனா மூக்கை நுழைப்பதை அனுமதிக்க முடியாது என்றும் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை நடைபெற்ற 2025 வரவு செலவுத் திட்டத்தின் மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கை மீனவர்களுடன் நாங்கள் பேசும் போது, இந்திய டோலர் படகுகளின் வருகை குறையுமாக இருந்தால் அதற்கான இந்தியா மற்றும் தமிழ் நாட்டுடன் பகைக்காமல் மாற்றுத் திட்டத்தை வழங்குவதாக கூறினர். தமிழ்த் தேசிய கூட்டமைப்பு சார்பாக பிரதமராக மன்மோகங் சிங் இருந்த போது ஆழ் கடல் மீன்பிடி முறையை அறிமுகப்படுத்தினால் பிரச்சினையை தீர்க்கும் என்று நாங்கள் அவரிடம் கூறினோம். இந்நிலையில் தமிழ்நாட்டு முதலமைச்சரை சந்திக்க ஏற்பாடு செய்யுமாறு அமைச்சரை கேட்கின்றோம். டில்லி அரசாங்கத்துடனும் பேசுவோம் என்றார்.

SUHATHEHAM ATHULARSAALAI (PVT) LTD
சுகதேகம் ஆதுலர்சாலை (பீவீட) எல்டீடி
Neithal Beach city, Navatkuli, Jaffna
Company No- PV0031448

சித்த, ஆயுர்வேத, மேற்கத்ய இணைந்த மருத்துவ சேவை

Opening Hours - 9.00 am - 5.00 pm
Monday - Saturday

Treatment for Following Diseases

- Joint disorders சகல விதமான மூட்டுவாதங்கள்
- Paralysis பாரிசவாதம்
- Skin diseases தோல் நோய்கள்
- obesity உடற்பருமன்
- Gynecological problems - பெண்ணியல் நோய்கள்
- A norectal diseases மூல வருத்தம்
- Diabetic Mellitus நீரிழிவு
- Diabetic foot ulcers - நீரிழிவு புண்கள்
- Vericose vein Kidney stone சிறுநீரககல்
- Hypertension உயர்குருதியமுக்கம்
- cholesterol கொலஸ்திரோல்
- GGIT disorders சமிபாட்டுத் தொகுதியுடன் தொடர்பான நோய்கள்

இலவச மருத்துவ முகாம்
* போயா தினங்களில் காலை 9 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை நடைபெறும்.
* இலவசமாக குருதியமுக்கம் நிமை, உயரம், உடற்திணிவுச்சுட்டி என்பவற்றை அளவிட முடியும்

Special Treatments

- Full body Therapy
- Head Massage
- Foot Massage -
- Herbal Medicated Bath
- Decoction Bath
- Shirod hara
- skin care therapy
- Nasya
- wellness treatment through yoga & counselling
- Leech Therapy

அனைத்து விதமான குழந்தைகளுக்கான மூலிகைத் தாவரங்கள், கோரோசனை மாத்திரைகள், கிரந்தி எண்ணை என்பனவனற்றை இங்கு பெற்றுக்கொள்ளலாம்

Other activities ஏனைய சேவைகள்

Nursery Garden - Medicinal Plants (மூலிகை தாவரங்கள்)
Medicinal leach (லீச் அட்டை வளர்ப்பு)

Neithal Beach city
Amman Kovil Road,
Navatkuli Jafina

Contact No-0762942218







இந்நாளிதழ் நல்லூர், இல - 68, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி6.03.2025 இல் வெளியிடப்பெற்றது.